# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 10.11.2020**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண்.NC1699/F/2019 (SA592/F/2019)**

திரு த. சுந்தரராஜ் ... மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்,
மாநகர் போக்குவரத்துக் கழகம்(சென்னை),
வரையறுக்கப்பட்டது,
பல்லவன் இல்லம்,
அண்ணா சாலை,
சென்னை - 600 002. ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 08.11.2018 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 20.12.2018 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 21.01.2019 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 29.05.2019 |
| ஆணை பெறப்படாத மனு நாள் | 22.07.2019 |

******

## ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 29.05.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தினால், இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல்

ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்விசாரணையில் மனுதாரர் திரு த. சுந்தரராஜ் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு ராபின்சன், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் திரு M.சௌந்தரராஜன், உதவி மேலாளர், (சட்டம்-நீதிமன்ற நடவடிக்கை), மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது, பல்லவன் இல்லம், அண்ணா சாலை, சென்னை ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 08.11.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், 2010ல் மேல்முறையீட்டாளருடைய அதிகாரி அவருடைய ஊதியத்தை திருடிவிட்டதாகவும், அது தொடர்பாக பல மனுக்கள் விண்ணப்பித்துள்ளதாகவும், மேற்படி அதிகாரி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் தண்டனை விவரம், திருடிய ஊதியத்தை மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான சான்று ஆகியவற்றை தகவலாக வழங்கக்கேட்டு, தகவல் அதிகாரி, தமிழ்நாடு அரசு, தலைமை செயலாளர் அலுவலகம், சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. 17.12.2018 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் 02.03.2010-க்கான ஊதியம் அந்த மாதத்திலேயே வழங்கப்பட்டது என்றும், மார்ச் 2010 சம்பள பில்லில் சரிபார்த்துக்கொள்ளுமாறும் தகவல் வழங்கியுள்ளார். 30 நாட்கள் கடந்தும் பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என தெரிவித்தும், தான் கோரிய தகவல்களை அளிக்கவும் கேட்டு, 20.12.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 31.12.2018 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். தான் கோரிய தகவல் கிடைக்கப்பெறவில்லை என்றும், திருப்தியற்ற தகவல் வழங்கியுள்ளதாகவும், தகவல் வழங்காத அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும், உரிய தகவல் வழங்க ஆணையிடவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 21.01.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 29.05.2019 அன்று **SA592/F/2019** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 22.07.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர், தான் கோரிய முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், முழுமையான சரியான தகவல்களை பெற்று வழங்குமாறும் ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார். மேலும் மேல்முறையீட்டாளர் தன்னுடைய தகவல் வழங்குவது தொடர்பாக நேரடி விசாரணை வேண்டி ஆணையத்தை கேட்டுக் கொண்டார்.

5. விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் தொடர்பாக ஏற்கனவே 03.06.2019 தேதியிட்டு கடிதம் வாயிலாக அனுப்பப்பட்டுள்ளதாகத் ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளருக்கு உரிய, முழுமையான தகவல் வழங்கப்படாமல் உள்ளது தெரிய வருகிறது. உரிய தகவல் வழங்காமல் தாமதமாக தகவல் வழங்கிய அலுவலரை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:

- **மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் ஏறத்தாழ 3 வருட காலமாக பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலரை தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் ஆணையத்திற்கு பதிவஞ்சல் மூலம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 08.11.2018 தேதியிட்ட மனுவில் கோரிய தகவல் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

மேல்முறையீட்டாளர் நேரடி விசாரணை கோரிய நிலையில், **இவ்வழக்கின் விசாரணை பிறிதொரு தேதிக்கு மாற்றி வைக்கப்படுகிறது. தேதியும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.** அன்றைய தினம் மனுதாரரும், உரிய பொதுத் தகவல் அலுவலரும் தவறாமல் ஆஜராகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.NC1699/F/2019 (SA592/F/2019)**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
மாநகர் போக்குவரத்துக் கழகம்(சென்னை),
வரையறுக்கப்பட்டது,
பல்லவன் இல்லம்,
அண்ணா சாலை,
சென்னை - 600 002.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு த. சுந்தரராஜ்,
எண்.2, நர்மதா தெரு விரிவு,
பாலாஜி நகர்,
இரும்புலியூர்,
சென்னை - 600 059.

**Copy to: Judgement File.**
**Spare/ JE / PA 19.11.2020**